

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.6.2023) தலைமைச் செயலகத்தில், மாநில சட்ட ஆணையத்தின் தலைவர் நீதியரசர் (ஓய்வு) சொ.நாகப்பன் சந்தித்து, சட்ட ஆணையத்தின் 72வது அறிக்கையினை வழங்கினார்.

## சைதையில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, ஜூன் 7 -

தமிழ் இனத்தின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பகுதி செயலாளர் இரா. துரைராஜ் எம்.சி. ஆகியோரது ஆலோசனைப்படி சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்டத்தில் மாவட்டப் பிரதி நிதிகள் ஜி. செல்வராஜ், வே.ரமேஷ்குமார் ஆகியோர் தலைமையில் நேருநகர் 2- வது மெயின்ரோட்டில் உள்ள வட்ட கழக அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் அலங்கரித்து வைக்கப்பட்டு மலர் மரியாதை செலுத்தப்பட்டது. கழகக் கொடியேற்றி இனிப்பு உணவு வழங்கப்பட்டது.

சைதை கிழக்கு பகுதி 172 வது 'அ' வட்ட கழக செயலாளர் எஸ். ஆர்.செந்தில் கழக கொடியினை ஏற்றி 500 பேருக்கு மதியம் அசைவ உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் த.கோ. வெங்கடேசன், அ.சக்திவேல், எம். நாராயணமூர்த்தி, ஆர்.சீனிவாசன், அசோக்குமார், கே.கே. மோகன், ராமசந்திரன், டி.லதா, செழியன், த.ரவீந்தர், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# கலைஞர் நூற்றாண்டு :ஓராண்டு விழா...

**முதல் பக்கத் தொடர்ச்சி**

18) **அனைத்து நிகழ்ச்சி களையும் சமூக வலைதளத்தில் பகிர்தல்.**

19) **கல்லூரிகளில் கலைஞர் பிறந்த நாள் நிகழ்ச்சிகள்.**

20) **தலைவர் கலைஞரின் படைப்புகள் குறித்து கல்வியாளர்கள் பங்கேற்கும் சொல்லரங்கம்.**

21) கழக மாவட்டங்கள் அனைத்திலும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை கழகச் சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்ளும் பொதுக்கூட்டங்கள்

22) மாவட்டந்தோறும் திரைப்படக் கலைஞர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள்/ கருத்தரங்குகள்.

23) மாவட்ட தலைநகரங்களில் "புகைப்பட கண்காட்சி".

24) அயலக அணியின் சார்பில் தமிழர்கள் வாழும் வெளிநாடுகளில் கருத்தரங்கம்.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

25) மகளிர் அணியின் சார்பில் மாவட்டந்தோறும் கருத்தரங்கங்கள், கலை நிகழ்ச்சிகள்.

26) 'தேதி சொல்லும் சேதி' வரலாற்று குறிப்புகள் அடங்கிய நூல் வெளியீடு.

27) கலைஞர் நூற்றாண்டில் அவர் நடத்திய தமிழ்நாடு மாணவர் மன்றம் மீண்டும் உருவாக்கப்பட்டு கல்லூரிகளில் தனி அமைப்பாகச் செயல்பட ஏற்பாடு.

28) மாவட்ட வாரியாக பேச்சுப் போட்டி நடத்தி மாநில அளவில் சிறந்த 100 பேச்சாளர்களைக் கண்டறிந்து கழக சொற்பொழிவாளர்களாக மாற்றுதல்.

29) மண்டல வாரியாக பேச்சாளர்களுக்கான ஒரு நாள் பயிலரங்கு.

30) கலைஞர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கிய இடங்களான கல்லூரிகள், பேருந்து நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், சமத்துவபுரங்கள் ஆகியவற்றை மக்களுக்கு நினைவூட்டும் வகையில் அந்த இடங்களில் நிகழ்ச்சிகள்.

31) "கலைஞர் 100" என்ற பெயரில் பேஸ்புக், ட்விட்டர், யூட்யூப் பக்கங்களைத் தொடங்கி பரப்புதல்.

32) கலைஞரின் முக்கியமான படைப்புகளை மாணவர்களுக்கு பரிசாக

வழங்கிட ஏற்பாடு.

33) மகளிர் அணியின் சார்பில் "கலைஞரும், மகளிர் மேம்பாடும்" எனும் தலைப்பில் 'பயிற்சிப் பாசறைகள் மற்றும் பயிலரங்கங்கள்".

34)தலைவர் கலைஞர் அவர்கள் திரைக்கதை வசனம் எழுதிய திரைப் படங்களை மாவட்டந்தோறும் காட்சிப்படுத்துதல்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 'கலைஞர் சுடர்' ஏந்தி திருவாரூர் 'கலைஞர் கோட்டம்' வரை தொடர் ஓட்டம்!

### சேலம்– திருப்பூர் மாவட்டங்களில்

## நீரில் மூழ்கி உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 7-

சேலம் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஆவடத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஜனார்த்தனன், த/பெ. ஆனந்தன் (27) மற்றும் அவரது மனைவி பவித்ரா (வயது 24) ஆகியோர் எடப்பாடி வட்டம், பூலாம்பட்டி கிராமம், மொளப்பாறை என்ற இடத்தில் காவிரி ஆற்றில் 4.6.2023 அன்று மாலை குளிக்கச் சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், வெள்ளக்கோவில் கிராமம், மஜரா செம்மாண்டம்பாளையத்தில் இயங்கி வரும் தனியாருக்குச் சொந்தமான குவாரியில் பணிபுரிந்து வந்த நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த பாபு (எ) ஜானகிராமன், த/பெ. காமராஜ் (வயது 37) என்பவர் 3.6.2023 அன்று எதிர்பாராத விதமாக குவாரியில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### பெரம்பலூர் மாவட்டம் திருச்சி–சென்னை தேசிய நெடுஞ்சாலையில்

## நிகழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 7-

பெரம்பலூர் மாவட்டம், திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதிஉதவி அறிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

பெரம்பலூர் மாவட்டம் மற்றும் வட்டம், எளம்பலூர் கிராமம், திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் 05.06.2023 அன்று அதிகாலை திண்டுக்கல் சென்று கொண்டிருந்த வாகனம், முன்னால் சென்று கொண்டிருந்த டிராக்டரை முந்தும் போது எதிர்பாராதவிதமாக சாலை நடுவில் இருந்த தடுப்பில் மோதி சாலையின் இடதுபுறம் விபத்துக்குள்ளானது.

சம்பவ இடத்திற்கு வந்த 108 ஆம்புலன்ஸ் வாகனத்தை நிறுத்தி காயம் ஏற்பட்டவர்களை ஆம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றிக் கொண்டிருந்தபோது தேசிய நெடுஞ்சாலையில் சென்னை நோக்கிச் சென்ற ஆம்னி பேருந்து, 108 ஆம்புலன்ஸ் மீது மோதியதில் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் மற்றும் அவருக்கு உதவி செய்து கொண்டிருந்த இரு நபர்களான திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி த/பெ.அழகர்சாமி (வயது 60), பெரம்பலூர் வட்டம், அரணாரை கிராமத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் (108 ஆம்புலன்ஸ் ஓட்டுநர்) த/பெ.இன்னாசிமுத்து (வயது 45) மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. கவிப்பிரியா க/பெ.சுப்ரமணி (வயது 22) ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் காயமடைந்து பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி.நீலா க/பெ.கோபால் (வயது 65), இராமநாதபுரம், பொந்தமல்லி கிராமத்தைச் சேர்ந்த கிழவன் த/பெ.குருசாமி (வயது 45), திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த கணேசன் த/பெ.குப்புசாமி (வயது 42), இராமநாதபுரம், பொந்தமல்லி கிராமத்தைச் சேர்ந்த சேகர் த/பெ.கருப்பையா (வயது 40) மற்றும் இராமநாதபுரம், பொந்தமல்லி கிராமத்தைச் சேர்ந்த சாமிதாஸ் த/பெ.தேவதாஸ் (வயது 40) ஆகியோருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது குடும்பத்திற்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா பட்டிமன்றம் குளித்தலை கடம்பர் கோவில் அருகில் நடைபெற்றது. மாவட்ட கழகச் செயலாளரும், அமைச்சருமான, வி.செந்தில் பாலாஜி தலைமை வகித்தார். நகரக் கழகச் செயலாளரும் குளித்தலை சட்டமன்ற உறுப்பினருமான இரா.மாணிக்கம் வரவேற்புரையாற்றினார். திராவிட மாடல் ஆட்சிக்கு பெரிதும் வழிகாட்டுவது கலைஞரின் கலைப் பணியே, அரசியல் பணியே, என்ற தலைப்பில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி நடுவராக இருந்து பட்டிமன்றம் நடைபெற்றது. கவிஞர் இனியவன், நாகநந்தினி, விஜயகுமார், கோவை தனபால், பேசினர். சட்டமன்ற உறுப்பினர்கள் பி.ஆர் இளங்கோ, க.சிவகாமசுந்தரி, வர்த்தக அணி துணைச் செயலாளர் பல்லவி ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.ராமர், செயற்குழு உறுப்பினர்கள் குளித்தலை ஏ.சிவராமன் சுப.ராஜகோபால் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கழகத்தில் உள்ள முன்னோடிகள், மாற்றுத் திறனாளிகள், மருத்துவம் – கல்வி உதவி தேவைப்படுவோருக்கு உதவித்தொகை வழங்கிடும் வகையில், கழக இளைஞர் அணி அறக்கட்டளைக்குப் பலரும் நிதி அளித்து வருகின்றனர். அந்த வகையில், சமீபத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளின் போது எங்களிடம் நிதி உதவி வழங்கியவர்களின் விவரம் வருமாறு:–

| வ. எண் | பெயர், பொறுப்பு, கழக மாவட்டம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | வே.ஆனந்தம், மாமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், சென்னை தெற்கு. | 5,00,000 |
| 2 | நே.சிற்றரசு, மாவட்டச் செயலாளர், சென்னை மேற்கு. | 1,00,000 |
| 3 | ராயல் வி.ராதாகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், திருவாரூர். | 55,555 |
| 4 | ராசு (எ) கோபால், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர், பெருந்துறை தெற்கு ஒன்றியம், ஈரோடு தெற்கு. | 50,000 |
| 5 | வி.ஆர்.நிசாந்த், தேவிப்பட்டணம், வேட்டைக்காரன்புதூர், ஆனைமலை(தா), கோவை. | 25,000 |
| 6 | தொ.மு.தியாகராஜன், பேரூர் ஊராட்சி கவுன்சிலர், தொண்டாமுத்தூர், கோவை. | 15,000 |
| 7 | கு.சுரேஷ்குமார், உதயநிதி நற்பணி மன்ற மாவட்டத் தலைவர், ஈரோடு வடக்கு. | 10,500 |
| 8 | எம்.மனோஜ், கிளைக் கழகச் செயலாளர், கைக்கோளப்பாயைம், மயிலம்பட்டி, கோவை. | 10,000 |
| 9 | க.டேனியல் சத்யா, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர், நாகை தெற்கு. | 10,000 |
| 10 | ம.நெல்சன் மண்டேலா, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர், திருவாரூர். | 10,000 |
| 11 | சபி முகம்மது, திருநெல்வேலி மத்திய மாவட்டம். | 10,000 |
| 12 | பி.மோகன்தாஸ், கழக மாணவர் அணி, நாமக்கல் கிழக்கு. | 10,000 |
| 13 | ஜெ.திருவாசகம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், ஈரோடு தெற்கு. | 5,555 |
| 14 | க.பாலாஜி, உத்திரங்குடி, பாங்கல் (ஊ), திருக்குவளை, நாகப்பட்டினம். | 5,000 |
| 15 | அ.பாரிபாலன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி, ஒருங்கிணைப்பாளர், நாகை தெற்கு. | 5,000 |
| 16 | கமலாசெல்வம், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், | 5,000 |
| 17 | கு.கோபிநாத், முத்தம்பாளையம், காசிப்பாளையம் (அ), ஈரோடு. | 3,333 |
| 18 | மதியழகன், அரஞ்சேரி, திருமானூர், அரியலூர். | 2,000 |
| 19 | இரா.கி.பிரபாகரன், நன்னிலம் தொகுதி சமூக வலைதள தன்னார்வலர், வலங்கைமான் தெற்கு, திருவாரூர். | 1,020 |
| 20 | ஏ.எஸ்.ராஜசேகர், மாவட்டத் துணைத் தலைவர் உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்றம், ஆண்டாங்கோயில், திருவாரூர். | 1,000 |
| 21 | மோ.அருண்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், கோவை மாநகர். | 1,000 |
| 22 | மு.புண்ணியமூர்த்தி, மணவாளன் நகர், இந்திர நகர், செல்லூர், மதுரை. | 500 |
| 23 | சு.ஜிமாருல் நவாஸ்தீன், நன்னிலம் நகரச் செயலாளர், உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்றம். | 500 |
| | மொத்தம் | 8,35,963 |

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 05–06–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி